பிரிவுகள் 2-ம், 3-ம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன. பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975-ஆம் ஆண்டு உடைமைகள் (நிறைவேற்றுதல் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்): (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 35/1975) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவை துணைத்தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை: "சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1975-ஆம் ஆண்டு உடைமைகள் (நிறைவேற்றுதல் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல்) (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1975) நிறைவேற்றப்பட வேண்டும்.''

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(5) தமிழ்நாடு 1975–ஆம்ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1975).

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: துணைத் தலைவர் அவர்களே, "சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு @(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1975) பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்''

என்று முன்மொழிகிறேன்.

மாநிலங்களுக்கிடையே நடைபெறும் வர்த்தகத்திலும் வாணிகத்திலும் சிறப்பு முக்கியத்துவம் உள்ளனவாயின் அறிவிக்கப்பட்ட சரக்குகளைப் பொறுத்தவரை 1956-ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் 15–ம் பிரிவில் விதிக்கப்பட்டிருந்த 3 சதவிகித வரம்பினை அச்சட்டத்திற்கு திருத்தம் ஒன்றைக் கொண்டு வந்து 4 சதவீதமாக உயர்த்தி இருக்கிறது. இதன் மூலம் 1—7—1975ல் இருந்து மாநிலங்களுக்கிடையே நடைபெறும் அறிவிக்கப்பட்ட சரக்குகளின் மீதுள்ள விற்பனை வரியின் மேல் வரம்பை 4 சதவீதமாக மாநில அரசு உயர்த்த இயலும். 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் இரண்டாவது விவர அட்டவணையில் 4ம் இனத்திலுள்ள "இரும்பு எஃகு-ன் மீதுள்ள உள்ளூர் விற்பனை வரியை 1—7—1975 முதல் மூன்று சதவீதத்திலிருந்து நான்கு சதவீதமாக உயர்த்தலாமென்றும் அறிவிக்கப்பட்ட ஏனைய சரக்குகளைப் பொறுத்தவரை தற்போதைக்கு வரியை உயர்த்த வேண்டியதில்லை என்றும் இந்த அரசு முடிவு செய்தது. இந்த சட்ட முன்வடிவை ஏற்குமாறு வேண்டுகிறேன்.

@ 199–200 ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1975) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பரிந்துரை எதும் இல்லை.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: துணைத்தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 36/1975) திருப்பியனுப்பப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 36/1975) திருப்பியனுப்பப் பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(பிற்பகல் 5-50)

(6) தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி, விற்பனை வரி (மேல்வரி) திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1975).

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி, விற்பனை வரி (மேல் வரி) திருத்த சட்ட முன்வடிவு @(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1975) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச்சட்டத்தில் திருத்தம் ஒன்றைச் செய்ததன் வாயிலாக, மாநிலங்களிடையே நிகழும் தொழில்

@ 200-201 ஆம் பக்கங்களில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.